**கோறளைப்பற்று வடக்கு பிரதேச சபை**
**மட்டக்களப்பு மாவட்டம்**

## 1 நிதிக்கூற்றுகள்

### 1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2016 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மே 05 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மே 16 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. 2016 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஒக்டோபர் 12 இல் சபையின் செயலாளருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கோறளைப்பற்று வடக்கு பிரதேச சபையின் 2016 டிசம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்களின் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 ஆவணச் சான்றுகள் இன்மை

நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட பின்வரும் ஒவ்வொரு விடயத்திற்கும் எதிரே சுட்டிக்காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| விடயங்கள் | பெறுமதி (ரூபா) | சான்றுகளின்மை |
|---|---|---|
| காணிகள், கட்டிடங்கள் | 86,023,198 | காணி உறுதி |
| பொறித்தொகுதியும் இயந்திரமும் | 786,500 | நிலையான சொத்துக்கள் பதிவேடு |
| தளபாடங்களும் பொருத்துகளும் | 1,546,229 | நிலையான சொத்துக்கள் பதிவேடு |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்ட நிதிசார்கூற்றுகளின்படி 2016 டிசம்பர் 31 ஆந் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா 927,396 ஆக இருந்ததுடன் ஒப்பிடுகையில் அதற்கு நேர் முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா 4,944,988 ஆக இருந்தது.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

--------------------------

### 3.1 செயற்பாட்டு செயற்திறனின்மை

--------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன

(அ) மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் நிதி ஏற்பாட்டின் கீழ் மேற்கொள்ளப்பட்டு 2016 திசெம்பர் 31 திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்யப்பட வேண்டிய வீதிகளுக்கு கொங்கிறீட் இடல் மற்றும் வடிகாண் அமைத்தல் வேலைகள் 2017 யூன் 30 ஆந் திகதி வரை ஆரம்பிக்கப்படாதிருந்த போதிலும் அவ்வேலைகள் திருப்திகரமாகப் பூர்த்திசெய்யப்பட்டதாக தொழில்நுட்ப உத்தியோகத்தரால் சான்றுபடுத்தப்பட்டு அவ்வமைச்சிடமிருந்து 2016 திசெம்பர் 31 ஆந் திகதி ரூபா 550,585 பணம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) பொது நிதியினை வினைத்திறனாகப் பயன்படுத்தும் குறிக்கோளுடன் மாகாண அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்காக ஒதுக்கப்படும் நிதியின் கீழ் மேற்கொள்ளப்படும் வேலைகளுக்கும் அதிக காலம் பயன்படுத்தக்கூடிய கார்பட் இடுதல், கொங்கிறீட் இடுதல், மற்றும் தார் பூசுதல் தவிர்ந்த கிறவல் போடுதல் போன்ற தற்காலிக பாதை அமைத்தலை செய்யாதிருக்க வேண்டுமென 2015 திசெம்பர் 30 ஆந் திகதிய 2016/01 ஆம் இலக்க நிதி ஆணைக்குழு சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அதனைப் பொருட்படுத்தாது மீளாய்வாண்டில் சபையினால் ஒரு வீதிக்கு ரூபா 429,565 செலவில் கிறவல் இடப்பட்டிருந்தது.

(இ) 2011 பெப்ரவரி 24 ஆம் திகதிய 02/2011 ஆம் இலக்க ஓய்வூதிய திணைக்களத்தின் சுற்றறிக்கையின் பிரகாரம் அமைய மற்றும் தற்காலிக அடிப்படையில் ஆட்சேர்க்கப்படுகின்ற ஊழியர்களுக்காக ஊழியர்களின் 8சதவீத பங்களிப்புப் பணத்தையும் தொழில் தருனரினால் 12சதவீத பங்களிப்பு பணத்தையும் அரச சேவை சேமலாப நிதியத்திற்கு அனுப்பிவைத்தல் வேண்டும். எனினும், 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் நியமிக்கப்பட்ட 12 ஊழியர்களுக்கு அவ்வாறு பங்களிப்புப் பணம் அனுப்பப்பட்டிருக்கவில்லை.

### 3.2 மனிதவள முகாமைத்துவம்

----------------------------------------------

2014 நொவம்பர் 12 ஆந் திகதிய 25/2014 இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கையின் பிரகாரம், அமைய மற்றும் ஒப்பந்த அடிப்படையில் உத்தியோகத்தர்களை சேர்த்துக்கொள்ளும் போது முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் முன் அனுமதி பெறப்பட்டு உரிய நிதி ஒதுக்கீட்டிற்கான அங்கீகாரமும் பெறப்பட்ட பின்னரே ஊழியர்கள் சேர்த்துக்கொள்ளப்படவேண்டிய போதிலும், அவ்வாறான முன் அனுமதியும் அங்கீகாரமும் பெறப்படாது 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் 18 ஊழியர்கள் அமைய மற்றும் ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தனர்.

## 4 கணக்களிபொறுப்பும் நல்லாளுகையும்

----------------------------------------------

### 4.1 தீர்வு காணப்படாத கணக்காய்வுப் பந்திகள்

----------------------------------------------------

சபை தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வுப் பந்திகளில் சுட்டிக்காட்டப்பட்ட ஒழுங்கீனங்கள் மற்றும் குறைபாடுகள் சம்பந்தமாக சபையினால் இதுவரை சீர் செய்யப்படாத கணக்காய்வுப் பந்திகளுக்கான தொடர்பு கீழே தரப்பட்டுள்ளன.

| அறிக்கைக்கான தொடர்பு | | உள்ளடக்கப்பட்ட விடயம் |
|---|---|---|
| **ஆண்டு** | **பந்தி இலக்கம்** | |
| 2015 | 2.2.3(ஆ) | பிணைப் பணம் பெறவேண்டிய உத்தியோகத்தர்களிடமிருந்து பிணைப் பணம் பெறப்பட்டிருக்காமை. |
| 2015 | 3.2 (ஆ) | ஆதனங்கள் மீது வீத வரிகள் அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காமை. |
| 2015 | 4.1 (ஆ) | நன்கொடையாக பெற்றுக்கொள்ளப்பட்ட வாகனங்கள் உரிமை மாற்றம் செய்யப்பட்டிருக்காமை. |

## 5. முறைமைகளும் மற்றும் கட்டுப்பாடுகளும்

கீழ்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| கட்டுப்பாடுகள் | விசேட கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் |
|---|---|
| (அ) கணக்கீடு | பெறவேண்டியவைகள் மற்றும் செலுத்த வேண்டியவைகளை கணக்கீடு செய்தல். |
| (ஆ) வருமான முகாமைத்துவம் | வருமான நிலுவைகளை அறவிட நடவடிக்கை எடுத்தல். |